# ஈஸ்வர் இராணுவம் மற்றும் காவலர் பயிற்சி மையம்

## 9ம் வகுப்பு தமிழ் புதிய பாடத்திட்டம்( முதல் பருவம்)

**I. சரியான விடையைத் தெரிவு செய்க:**

1. குழுவில் விடுபட்ட வரிசையைத் தேர்ந்தெடுக்க?

| குழு - 1 | குழு - 2 | குழு - 3 | குழு - 4 |
|---|---|---|---|
| நாவாய் | மரம் | துறை | தன்வினை |
| தோணி | மர | விருத்தம் | காரண வினை |

**அ. வங்கம், மானு, தாழிசை, பிறவினை** ஆ. தாழிசை, மானு, பிறவினை, வங்கம்
இ. பிறவினை, தாழிசை, மானு, வங்கம் ஈ. மானு, பிறவினை, வங்கம், தாழிசை

2. தமிழ்விடு தூது ----- என்னும் இலக்கிய வகையைச் சேர்ந்தது?
அ. தொடர்நிலைச் செய்யுள் ஆ. புதுக்கவிதை **இ. சிற்றிலக்கியம்** ஈ. தனிப்பாடல்

3. விடுபட்ட இடத்திற்குப் பொருத்தமான வரிசையைக் குறிப்பிடுக?
1. --------- இனம் 2. வண்ணம் --------- 3. --------- குணம் 4. வனப்பு ---------
**அ. மூன்று, நூறு, பத்து, எட்டு** ஆ. எட்டு, நூறு, பத்து, மூன்று
இ. பத்து, நூறு, எட்டு, மூன்று ஈ. நூறு, பத்து, எட்டு, மூன்று

4. காலம் பிறக்கும்முன் பிறந்தது தமிழே!
காலமும் நிலையாய் இருப்பதும் தமிழே! ---------- இவ்வடிகளில் பயின்று வரும் நயங்கள்
அ. முரண், எதுகை, இரட்டைத்தொடை ஆ. இயைபு, அளபெடை, செந்தொடை
**இ. எதுகை, மோனை, இயைபு** ஈ. மோனை, முரண், அந்தாதி

ESWAR ACADEMY

5. **அழியா** வனப்பு, **ஒழியா** வனப்பு, **சிந்தா** மணி - அடிக்கோடிட்ட சொற்களுக்கான இலக்கணக்குறிப்பு -
அ. வேற்றுமைத் தொகை **ஆ. ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்**
இ. பண்புத் தொகை ஈ. வினைத் தொகை

6. பொருத்தமான பெயரடைகளை எழுதுக?
(நல்ல, பெரிய, இனிய, கொடிய)
அ) எல்லோருக்கும் **இனிய** வணக்கம்
ஆ) அவன் **நல்ல** நண்பனாக இருக்கிறான்.
இ) **பெரிய** ஓவியமாக வரைந்து வா
ஈ) **கொடிய** விலங்கிடம் பழகாதே

7. பொருத்தமான வினையடைகளைத் தேர்வு செய்க?
(அழகாக, பொதுவாக, வேகமாக, மெதுவாக)
அ) ஊர்தி **வேகமாக** சென்றது.
ஆ) காலம் **மெதுவாக** ஓடுகிறது.
இ) சங்க இலக்கியம் வாழ்க்கையை **அழகாக** காட்டுகிறது.
ஈ) இணையத்தளதிலிருந்து பதிவிறக்கம் செய்யப்பட்டதை அனைவருக்கும் **பொதுவாக** காட்டு.

8. “மிசை” என்பதன் எதிர்ச்சொல் என்ன?
அ. கீழே ஆ. மேலே இ. இசை ஈ. வசை

9. நீர் நிலைகளோடு தொடர்பில்லாதது எது?
அ. அகழி ஆ. ஆறு இ. இலஞ்சி ஈ. புலரி

10. பொருத்துக:
அ. நீரின்றி அமையாது உலகு - 1. திருவள்ளுவர்
ஆ. நீரின்று அமையாது யாக்கை - 2. ஔவையார்
இ. மாமழை போற்றதும் - 3. இளங்கோவடிகள்?
அ. அ, இ ஆ. ஆ, இ இ. அ, ஆ ஈ. அ,ஆ,இ

11. பொருத்தமான வினையை எடுத்து எழுதுக:
கதிர் அலுவலகத்திலிருந்து விரைவாக ------------
அவன் பையன் பள்ளியிலிருந்து இன்னும் ------------
அ. வந்தான், வருகின்றான் ஆ. வந்துவிட்டான், வரவில்லை
இ. வந்தான், வருவான் ஈ. வருவான், வரமாட்டான்

12. மல்லல் மூதூர் வயவேந்தே - கோடிட்ட சொல்லின் பொருள் என்ன?
அ. மறுமை ஆ. பூவரசு மரம் இ. வளம் ஈ. பெரிய

13. பொருந்தாத இணை எது?
அ. ஏறுகோள் - எருதுகட்டி ஆ. திருவாரூர் - கரிக்கையூர்
இ. ஆதிச்சநல்லூர் - அரிக்கமேடு ஈ. பட்டிமன்றம் - பட்டிமண்டபம்

14. முறையான தொடர் அமைப்பினைக் குறிப்பிடுக?
அ. தமிழர்களின் வீரவிளையாட்டு தொன்மையான ஏறுதழுவுதல்
ஆ. தமிழர்களின் வீரவிளையாட்டு ஏறுதழுவுதல் தொன்மையான
இ. தொன்மையான வீரவிளையாட்டு தமிழர்களின் ஏறுதழுவுதல்
ஈ. தமிழர்களின் தொன்மையான வீரவிளையாட்டு ஏறுதழுவுதல்

15. பின்வருவனவற்றுள் தவறான செய்தியைத் தரும் கூற்று -
அ. அரிக்கமேடு அகழ்வாய்வில் ரோமானிய நாணயங்கள் கிடைத்தன.
ஆ. புறப்பொருள் வெண்பாமாலை என்னும் இலக்கண நூலிலும் ஏறுகோள் குறித்துக் கூறப்பட்டுள்ளது.
இ. எட்டு, பத்து ஆகிய எண்ணும் பெயர்களின் பின் வல்லினம் மிகாது
ஈ. பட்டிமண்டபம் பற்றிய குறிப்பு மணிமேகலையில் காணப்படுகிறது.

16. சொற்றொடர்களை முறைப்படுத்துக?
1. ஏறுதழுவுதல் என்பதை, 2. தமிழ் அகராதி, 3. தழுவிப் பிடித்தல் என்கிறது
அ. ஆ,அ,இ ஆ. ஆ,இ,அ இ. இ,ஆ,அ ஈ. இ.அ,ஆ

17. கீழ்க்காணும் மூன்று தொடர்களுள்-
1. இருந்த இடத்திலிருந்தே பயணச்சீட்டு எடுப்பதை எளிதாக்கிய மிகப் பெரிய இந்திய நிறுவனம் இந்தியத் தொடர்வண்டி உணவு வழங்கல் மற்றும் சுற்றுலாக் கழகம் ஆகும்.
2. வங்கி அட்டை இல்லை என்றால் அலைபேசி எண், வங்கிக் கணக்கு எண் ஆகியவற்றைக் கொண்டு பணம் செலுத்துதல் இயலாது.



ESWAR ACADEMY

3. திறன் அட்டைகள் என்பவை குடும்ப அட்டைகளுக்கு மாற்றாக வழங்கப்பட்டவாகும்.

அ. அ,ஆ ஆகியன சரி: இ தவறு **ஆ. அ,இ ஆகியன சரி: ஆ தவறு**

இ. அ தவறு: ஆ, இ ஆகியன சரி ஈ. மூன்றும் சரி

18. தமிழ்நாடு அரசு கிராமப்புற மாணவர்களுக்கு நடத்தும் திறனாய்வுத் தேர்வு எது?

அ. தேசிய திறனாய்வுத் தேர்வு **ஆ. ஊரகத் திறனாய்வுத் தேர்வு**

இ. தேசியத் திறனாய்வு மற்றும் கல்வி உதவித் தொகைத் தேர்வு ஈ. மூன்றும் சரி

19. ஒன்றறிவதுவே உற்றறிவதுவே

இரண்டறிவதுவே அதனொடு நாவே - தொல்காப்பியர் இவ்வடிகளில் அதனொடு என்பது எதைக் குறிக்கிறது?

அ. நுகர்தல் **ஆ. தொடு உணர்வு** இ. கேட்டல் ஈ. காணல்

20. பின்வரும் தொடர்களைப் படித்து "நான்" யார் என்று கண்டுபிடிக்க.

அறிவியல் வாகனத்தில் நிறுத்தப்படுவேன்

எல்லாக் கோளிலும் ஏற்றப்படுவேன்

இளையவர் கூட்டம் என்னை ஏந்தி நடப்பர்

அ. இணையம் ஆ. தமிழ் இ. கணினி **ஈ. ஏவுகணை**

21. விடை வரிசையைத் தேர்க,

1. இது செயற்கைக்கோள் ஏவு ஊர்தியின் செயல்பாட்டை முன்கூட்டியே கணிக்கும்.
2. இது கடல்பயணத்துக்காக உருவாக்கப்பட்ட செயலி

அ. நேவிக், சித்தாரா ஆ. நேவிக், வானூர்தி இ. வானூர்தி, சித்தாரா **ஈ. சித்தாரா, நேவிக்**

ESWAR ACADEMY

**For More**

**ESWAR ARMY AND POLICE COACHING CENTRE**

**SEKKAPATTY BATLAGUNDU DINDIGUL DT**

**MOB:9940719961 WHATS APP: 8526837318**